1990 சனவரி 19]

## கொடைக்கானல் மலைப் பகுதியில் கொத்தடிமை முறை

* 695 திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், கொடைக் கானல் மலைப் பகுதியில் (வட்டத்தில்) இன்னும் கொத்தடிமை முறை நடைமுறையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், கொடைக் கானல் வட்டத்தில், தற்போது கொத்தடிமை முறை நடை முறையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

10.10 மணி

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் பகுதியில் கடந்த மூன்று ஆண்டு களுக்கு முன்னால் கொத்தடிமை முறையால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான குடும்பங்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் அப்போது இருந்த ஒரு உதவி கலெக்டர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அப்போதுஇருந்த அரசு அந்தத் துணை ஆட்சித் தலைவரை வேறு இடத்திற்கு மாற்றி, அந்தக் கொத்தடிமையினருக்குப் பாதகமான நிலையை ஏற்படுத்தினார்கள். நான் சமீபத்திலே கொடைக்கான லுக்குச் சென்றபோது, அந்த கொத்தடிமை முறை மீண்டும் அதே நிலையில்தான் இருந்து கொண்டு இருக்கிறது என்பதைக் கண் டேன். அந்த மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்கள் இதை என்னிடம் ஒரு குறையாகச் சொன்னார்கள். ஆகவே மீண்டும் சம்பந்தப்பட்டத் துறை அதிகாரிகளை அனுப்பியாவது அவர் களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்கு அரசு முயற்சிக் குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, குறிப்பாக எந்தெந்த இடத்திலே அப்படிப்பட்ட கொத்தடிமை முறை இருக்கிறது என்பதை விவரமாக அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களானால், உடனடியாக

நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே ஒரு அதிகாரி மிகத் தீவிர மாக அந்த முயற்சியிலே இறங்கியதை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபோன்று அத்தகைய கொத்தடிமை முறையை ஒழிக்கின்ற முயற்சியிலே இறங்குகிற எந்த அதிகாரி யாக இருந்தாலும், அவர்கள் ஊக்கப்படுத்தப்படுவார்கள். அதற்கு வாய்ப்பாக எந்த இடத்தில் அந்த முறை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் மாத்திரமல்ல, அவையிலே உள்ள எந்த உறுப்பினரும் அந்த நிலை எங்கிருந்தாலும் அதை அரசுக்குத் தெரிவித்தால், அது அரசு நடவடிக்கை எடுக்க நல்ல வழிவகை வகுப்பதாக இருக்கும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கொத்தடிமைகளுக்கு உதவியாக இருந்த அதிகாரியை அப்போதிருந்த அரசாங்கம் மாற்றியது. இப்போது இருக்கிற அரசாங்கம் அல்ல. ஆகவே இப்போது இருக்கக்கூடிய அரசாங்கம், அத்தகைய அதிகாரிகளை ஊக்கப்படுத்தும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் எந்த எந்த இடத்திலே அந்த மாதிரி யான முறைகள் இருக்கின்றன என்ற தெளிவான குறிப்புகள் என்னிடத்திலே இப்போது இல்லை. அதுகுறித்த விவரங்களை நான் முதலமைச்சருக்கே சமர்ப்பிக்கிறேன். அதற்கு முன்பாக அரசும் தன்னுடைய முயற்சியாக முன்முயற்சி எடுத்து, சம்பந் தப்பட்ட துறை அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, அதைக் கவனித்தால், அவர்களுக்கே அந்தத் தகவல் கிடைக்கும் என்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(விடை—இல்லை.)

பேரணாம்பட்டு ஆதி திராவிடர் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்.

*3441. திரு. வெ. கோவிந்தன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பேரணாம்பட்டு ஆதி திராவிடர் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வடாற்காடு மாவட்டம் பேரணாம்பட்டு ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.